**ஆயுர்வேத மருத்துவ சபையின் - 2021**
------------------------------------------------------------------

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

ஆயுர்வேத மருத்துவ சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) பிரிவின் படி பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்கள் ஆயுர்வேத மருத்துவ சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற

தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணங்காமைகள்

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1961 இன் 31 ஆம் இலக்க ஆயுர்வேத சட்டத்தின் III ஆம் பகுதி | | | |
| (i) 11(1)(உ) பிரிவு | பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத வைத்தியர்களினால் அவர்களுக்கிடையே தெரிவு | ஆயுர்வேத வைத்தியர்கள் மூன்று பேர்களையும் மருத்துவ சபை அங்கத்தவர்களாக நியமிப்பதற்கு | ஆயுர்வேத சட்டத்தின் பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செய்யப்படுகின்ற அங்கத்தவர்களின் மூன்று பேர் சபையின் அங்கத்தவர்களாக நியமிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த அங்கத்தவர்கள் மூன்று பேரையும் நியமிப்பதற்கு மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 1963 மார்ச் 15 ஆந் திகதிய 13564 ஆம் இலக்க வர்த்தமானி பத்திரத்தின் பிரகாரம் ஆயுர்வேத ஆணையாளரால் வாக்கெடுப்பு நடாத்த வேண்டியிருந்ததுடன் நடாத்த வேண்டிய வாக்கெடுப்பு தொடர்பாக அமைச்சின் பரிந்துரை இதுவரை கிடைக்காதிருந்தமை மற்றும் ஆயுர்வேத சட்டம் திருத்தப்பட்டு ஆயுர்வேத மருத்துவ சபை சுயாதீனமாக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் ஆயுர்வேத மருத்துவ சபையின் அங்கத்தவர்கள் உள்ளடக்கமும் திருத்த வேண்டியிருந்தது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 18(இ) மற்றும் (ஈ) பிரிவுகள் | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையில் பதிவு செய்யப்பட்ட மொத்த தாதி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 39 மற்றும் மருந்து கலவையாளர்களின் எண்ணிக்கை 260 ஆக இருந்ததுடன் பதிவை காலரீதியில் புதுப்பிக்கும் திட்டமுறைமையொன்று பின்பற்றப்பட்டிராமையால் அந்த எண்ணிக்கை நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. | ஆயுர்வேத மருத்துவ சபையில் பதிவு செய்துள்ள தாதி உத்தியோகத்தர்கள் மற்றும் மருந்து கலவையாளர்களின் தகவல்களை நாளதுவரையாக்கு வதற்காக ஆயுர்வேத திணைக்களம் மற்றும் மாகாண ஆயுர்வேத ஆணையாளர்களின் தகவல்கள் கோரப்பட்டுள்ளதுடன் தாதி உத்தியோகத்தர்கள் மேற்கத்திய மருத்துவ சபையில் பதிவு செய்திருந்தமையால் அவர்கள் ஆயுர்வேத மருத்துவ சபையில் பதிவு செய்தல் நிராகரிக்கப் பட்டிருந்தமை. | - மேற்படி - |
| (iii) | 19(1)(அ) பிரிவு | சபையின் செயலாளராகவும், பதவியணியினரின் பிரதான உத்தியோகத்தராகவும் செயற்பட வேண்டியிருந்த பதிவாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த பதவிக்கு பொருத்தமான ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரித்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படாதிருந்ததுடன் நிரந்தர அடிப்படையில் பதிவாளர் ஒருவரை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் அந்த பதவிக்காக ஒப்பந்த அடிப்படையிலும், பதிற் கடமை | ஆயுர்வேத மருத்துவ சபைக்காக 2021 ஏப்ரல் 05 ஆந் திகதி முதல் முழுநேர சேவைக்காக சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பதிவாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதுடன் பதிவாளரை ஆட்சேர்க்கும் நடைமுறை தயாரிப்பதற்குரிய சட்டங்கள் மற்றும் திருத்தங்கள் சட்ட வரைவு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் இறுதி அறிக்கை கிடைத்ததன் பின்னர் ஆயுர்வேத மருத்துவ சபையின் பதிவாளரை ஆட்சேர்க்கும் நடைமுறை தயாரித்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு | ஆயுர்வேத சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அடிப்படையிலும் தொடர்ச்சியாக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது | நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை<br>------------------------- | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 135(1) | ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களும் உத்தியோகத்தர்கள் இரண்டு மூன்று பேர்கள் ஊடாக பரிசோதனைக்கு உட்படும் வகையில் நிதி கட்டுப்பாடு தொடர்பாக கடமைகள் சிலருக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக சபையின் காசு உத்தியோகத்தரின் பொதுவான கடமைகளுக்கு மேலதிகமாக சில்லறை காசு பொறுப்பு, சில்லறைக் காசு உறுதிச்சீட்டு தயாரித்தல், சில்லறைக் காசேடு பேணிச் செல்லல் அந்த உத்தியோகத்தருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. | 2022 ஏப்ரல் 18 ஆந் திகதி முதல் காசுப் பிரிவின் செயற்பாடுகளை செய்கின்ற உத்தியோகத்தரால் சில்லறைக் காசு கட்டுநிதி உதவி நிதியாளரின் மேற்பார்வையின் கீழ் பேணிச் செல்லப்படுவதுடன் சில்லறைக் காசு உறுதிச்சீட்டுக்கள் தயாரித்தல் வேறொரு முகாமைத்துவ சேவை உத்தியோகத்தரால் மேற்கொள்ளப் படுகின்றது. கடமைப் பட்டியல் திருத்தப்பட்டு சில்லறைக் காசு பொறுப்பு மற்றும் சில்லறைக் காசு உறுதிச்சீட்டுக்கள் தயாரித்தல் பிரதான முகாமைத்துவ உதவியாளருக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் சகல சில்லறை காசு கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு முன்னர் பதிவாளரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கும் உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) | செயல்நிமித்த உபகட்டு நிதி அவை பெறப்பட்ட பணிகள் பூர்த்தியடைந்ததும் உடனடியாக மற்றும் 10 தினங்களுக்குள் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2021 ஆம் ஆண்டில் பெற்ற 29 செயல்நிமித்த கட்டுநிதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 133,000 ஆன 02 செயல்நிமித்த கட்டுநிதிகளினை தீர்த்து வைப்பதற்கு 16 நாட்களுக்கும் 34 நாட்களுக்கும் இடையிலான | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | காலம் எடுத்திருந்தது. மேலும் உரிய பணிகளை ஆரம்பிக்கும் திகதிக்கு முன்னர் முற்பணம் விநியோகிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் பணிகள் ஆரம்பிப்பதற்கு 04 நாட்களுக்கும் 06 நாட்களுக்கும் இடையிலான காலத்திற்கு முன்னர் ரூபா 183,000 ஆன 04 செயல்நிமித்த உபகட்டு நிதிகள் விநியோகிக்கப் பட்டிருந்தன. | | |
| (iii) | நிதிப்பிரமாணம் 385(1)(அ) | வங்கிக் கணக்கிலுள்ள காலாவதியான ரூபா 500 அல்லது அதற்கு மேற்பட்ட தொகை காசோலை மூலம் செலுத்த வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது 11 உத்தியோகத்தர்களுக்கு விநியோகிக்கப்பட்ட கூட்டுமொத்தமாக ரூபா 1,098,500 ஆன இடர் கடனுக்காக காசோலை விநியோகிக்கப்படாமல் காசாக செலுத்தப்பட்டிருந்தது. | பதவியணி உத்தியோகத்தர்களின் கோரிக்கையின் படி அவர்களின் வசதிக்காக பணமாக செலுத்தப்பட்ட போதும், எதிர்காலத்தின் போது நிதிப்பிரமாணம் 385(1)(அ) இன் பிரகாரம் ரூபா 500 இற்கு மேற்பட்ட சகல கொடுப்பனவு களுக்காகவும் காசோலைகள் விநியோகிக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (iv) | நிதிப்பிரமாணம் 391, 394 மற்றும் 396 | 2020 திசெம்பர் மாதத்தின் போது விநியோகிக்கப்பட்ட போதும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படாத ரூபா 5,500 பெறுமதியான 02 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | சபையினால் நடாத்தப்பட்ட பாரம்பரிய வைத்தியர்களின் எழுத்துமூல பரிசோதனைக்கு உரியதாக விநியோகிக்கப்பட்ட இரண்டு காசோலைகளாக இருந்தமை, அந்த காசேலைகளின் பெறுமதியை மீண்டும் வருமானத்திற்கு எடுப்பதற்கும் மற்றும் உரிய நபர்கள் பின்னர் கோரிக்கை சமர்ப்பித்தால் புதிய காசோலை மூலம் கொடுப்பனவு செய்வதற்கும் சபையின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக சபைப் பத்திரமொன்று அனுப்பப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (இ) | 2005 யூலை 05 ஆந் திகதிய 14/13/08(03) ஆம் இலக்க ஆயுர்வேத மருத்துவ சபை | சபையில் பதிவு செய்துள்ள சகல வைத்தியர்களும் 05 வருடங்களுக்கு ஒரு தடவை பதிவினை நாளதுவரையாக்க வேண்டியிருந்த போதும் பதிவினை நாளதுவரையாக்கு | ஆயுர்வேத மருத்துவ சபையில் பதிவு செய்துள்ள சகல வைத்தியர்களும் 2014 ஒக்தோபர் 15 ஆந் திகதிய 1884/36 ஆம் இலக்க வர்த்தமானி பத்திரத்தின் பிரகாரம் ஒவ்வொரு 5 | வைத்தியர்களின் பதிவினை நாளது வரையாக்கு வதற்கு முறையான |

| | | | |
|---|---|---|---|
| பத்திரம் மற்றும் 2014 ஒக்தோபர் 15 ஆந் திகதிய 1884/36 ஆம் இலக்க வர்த்தமானி | வதற்காக சபையினால் முறையான திட்டமொன்று இனங்காணப்பட்டு அமுல்படுத்தப் படாமையின் காரணமாக 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் பதிவு செய்து 05 வருடங்களை விஞ்சிய 19,158 வைத்தியர்கள் தமது பதவினை புதுப்பித்திருக்கவில்லை. | வருடங்களுக்கும் ஒரு தடவை நாளதுவரையாக்கல் தொடர்பாக ஊடகங்கள் மற்றும் மாகாண ஆயுர்வேத ஆணையாளர் மூலம் அறிவிக்கப்பட்டுள்ள துடன் பதிவினை புதுப்பிக்காத வைத்தியர்களின் பெயர்ப் பட்டியல் மாவட்ட மட்டத்தில் தயாரித்து மாகாண ஆயுர்வேத ஆணையாளர் மூலம் அவர்களுக்கு அறிவித்தல் வழங்கி பதிவினை புதுப்பிப்பதற்காக அனுப்பப்படும் வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | திட்ட முறைமை யொன்றை அறிமுகப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 115,858 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 45,912 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 69,946 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 756,060 கணக்காய்வு கட்டணங்களில் இருந்து ரூபா 155,460 மிகை ஒதுக்கீடாக மீளாய்வாண்டின் வருமானத்தில் சேர்க்கப்பட்டமை இந்த அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் முக்கிய பகுப்பாய்வு

(அ) சபையின் சம்பளம் மற்றும் வேதனங்களுக்கான அரசாங்கத்தின் மானியங்கள் தவிர முன்னைய ஆண்டில் ரூபா 6,183,477 தொகையான சபையின் வருமானம் மீளாய்வாண்டின் போது ரூபா 5,478,047 வரை ரூபா 705,430 இனால் அதாவது 11.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டில் ரூபா 12,137,565 தொகையான சபையின் மொத்த செலவினம் மீளாய்வாண்டின் போது ரூபா 12,717,649 வரை ரூபா 580,084 இனால் அதாவது 4.8 சதவீதத்தால் உயர்வடைந்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது சபையின் செயற்பாட்டு செலவினம் 46 சதவீதத்தினால் உயர்வடைந்து சென்றமை அதற்கு காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஆயுர்வேத மருத்துவ சபையில் பதிவு செய்துள்ள வைத்தியர்களின் தொழில்தகைமை முரண்பாடுகள் தொடர்பாகவும், பதிவு செய்யாத | ஆயுர்வேத மருத்து சபைக்கு கிடைக்கின்ற முறைப்பாடுகள் தொடர்பாக பின்தொடர் | சபைக்கு கிடைக்கின்ற முக்கியமான சகல முறைப்பாடுகளும் விசாரணை செய்து |

| | | | |
|---|---|---|---|
| | ஆயுர்வேத வைத்தியர்களாக இருக்கின்ற நபர்கள் தொடர்பாகவும் கடந்த 05 ஆண்டுகளின் போது கிடைக்கப் பெற்ற 238 முறைப்பாடுகளில் 41 முறைப்பாடுகளுக்கான விசாரணை நடவடிக்கைகள் 2022 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மீளாய்வாண்டின் போது கிடைக்கப் பெற்ற 50 முறைப்பாடுகளில் 18 முறைப்பாடுகள் மேலதிக பரிசோதனைகளுக்காக பொலிசிற்கு அனுப்பப்பட்டுள்ள போதிலும் அந்த முறைப்பாடுகள் தொடர்பாக போதியளவான பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. மேலும் முறைப்பாடுகள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் காலரீதியில் அதன் செயல்முன்னேற்றத்தை மதிப்பிடுதலை மேற்கொள்ளக் கூடிய வகையில் முழுமையான தகவல்கள் முறைப்பாட்டில் குறிப்பிடும் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் காலரீதியில் அதன் செயல்முன்னேற்றத்தை மதிப்பிடுதல் என்பவற்றை மேற்கொள்ளக் கூடிய வகையில் முழுமையான தகவல்கள் முறைப்பாட்டை குறிக்கும் பதிவேட்டில் 2022 ஆம் ஆண்டிலிருந்து பேணிச் செல்லப்படுவதுடன் ஏனைய விசாரணை நடவடிக்கைகளை விரைவா பூர்த்தி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | தேவையான மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். பொலிசிற்கு அனுப்பப்பட்டுள்ள முறைப்பாடுகள் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள செயல்முறைகள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். முறைப்பாடுகள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் காலரீதியின் அதன் செயல் முன்னேற்றத்தை மதிப்பிடும் வகையில் முழுமையான தகவல்களை பேணிச் செல்லல் வேண்டும். |
| (ஆ) | பாரம்பரிய வைத்தியர் ஒருவராக பதிவு செய்வதற்காக நபர்களிடமிருந்து இலஞ்சம் பெற்றுக்கொள்ளல் மற்றும் அதற்காக தலைமை வைத்தியரின் கையொப்பம் போலியாக இடல் மற்றும் மருத்துவ சபை அங்கத்தவர் பதவி முறையற்றது என்ற குற்றம் தொடர்பாக ஆரம்ப விசாரணை அறிக்கையில் குற்றம் சுமத்தப்பட்ட மருத்துவ சபையின் அங்கத்தவர் அந்த காரணங்களை உள்ளடக்கிய மருத்துவ சபையின் தீர்மானங்களை எடுக்கும் போது தொடர்ச்சியாக சபைக் கூட்டங்களில் பங்குபற்றியிருந்தார். | இது தொடர்பாக பொலிஸ் விசாரணையொன்று நடாத்தப்படுவதுடன் விசாரணை உத்தியோகத்தர் தயாரித்த குற்றப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்ட பரிந்துரைகளை அமுல்படுத்தும் தினம் வரை இது தொடர்பாக வெளியிடப்பட்டிருந்தமை, மாலேவன சோபித தேரரின் பிரத்தியே செயலாளராக செயற்படுகின்ற மருத்துவ சபை அங்கத்தவரை வரவழைத்து கூற்றொன்று எழுதப்பட்டமை மற்றும் மீண்டும் புலனாய்வு அறிக்கையொன்றை தயாரித்து சபைக்கு சமர்ப்பித்ததன் பின்னர் இது தொடர்பாக கலந்துரையாடுவதற்கு சபை தீர்மானம் எடுத்துள்ளது. | குற்றம் சுமத்தப்பட்ட ஒருவர் தொடர்பாக தீர்மானம் எடுக்கும் போது உரிய நேரடி அல்லது மறைமுக தாக்கங்களின் கீழ் அல்லாத வகையில் பக்கசார்பற்ற நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 3,871,274 திரண்ட இலாபமொன்று காணப்பட்ட போதிலும் பணிக்கொடை முதலீட்டு கணக்குகளை தவிர்க்கும் போது நிலையான வைப்பு மற்றும் ஏனைய முதலீட்டு சொத்துக்களை கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | நிறுவனத்தின் எதிர்கால நிலைபேறை வைத்துக் கொள்வதற்காக முதலீட்டு சொத்துக்களை கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் மருத்துவ சபையில் பதிவு செய்துள்ள வைத்தியர்களின் எண்ணிக்கை 26,183 ஆகவும், மரணமடைந்த எண்ணிக்கை 3,800 ஆகவும் இருந்தமை அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் மரணமடைந்த பாரம்பரிய மருத்துவர்கள் தொடர்பாக சரியான தகவல்கள் நாளதுவரையாக வழங்கும் திட்டமுறைமையொன்று மற்றும் மரணமடைந்த வைத்தியர்களின் பதிவினை இரத்துச் செய்து அது தொடர்பாக பொதுமக்களுக்கு அறிவித்தல் வழங்கும் திட்டமுறைமையொன்று அமுல்படுத்தப்படாதிருந்த மையால் உரிய பதிவு சான்றிதழ் முறையற்ற வகையில் பயன்படுத்துவதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | மரணமடைந்தமைக்கு மரண சான்றிதழ் அல்லது பிரதேச செயலாளரால் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்கள் அல்லது பிறப்பு, இறப்பு பதிவாளரினால் மேற்கொள்ளப்படுகின்ற அறிவித்தலின் அடிப்படையில் பதிவேட்டிலிருந்து பெயரை அகற்றுவதற்கும் மற்றும் அதனை இரத்துச் செய்து வைத்தியர்களின் பெயர்களை மாகாண ஆயுர்வேத ஆணையாளருக்கு அறிவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பொருத்தமான மற்றும் சரியான தீர்மானத்தை எடுப்பதற்காக நாளதுவரை யாக்குதல் மற்றும் சரியான புள்ளி விபரங்கள் பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| (இ) | பாரம்பரிய வைத்தியராக பதிவு செய்ய எதிர்பார்த்துள்ள விண்ணப்ப தாரர் பயிற்சிக் காலத்தில் மதிப்பீட்டிற்காக தயாரித்த நியதிகளின் பிரகாரம் மாணவர்களை பதிவு செய்யும் நடவடிக்கைகள் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. | பாரம்பரிய ஆயுர்வேத மருத்துவராக பதிவு செய்ய எதிர்பார்த்துள்ள விண்ணப்பதாரர்களின் முன் பதிவிற்குரிய பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றதுடன் இந்த திட்ட முறைமை 2025 முதல் அமுல்படுத்துவதற்கு | மாணவர்களை பதிவு செய்யும் நடவடிக்கைகள் விரைவாக ஆரம்பிக்கப்படல் வேண்டும். |

மருத்துவ சபை அங்கீகரித்துள்ளது.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 02 செயற்பாடுகள் மீளாய்வாண்டின் போது ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்ததுடன் மேலும் 04 செயற்பாடுகளின் பௌதீக செயல்முன்னேற்றம் 50 சதத்தை விட குறைவாக இருந்தது. | ஆயுர்வேத மருந்து கலவையாளர்கள் மற்றும் ஆயுர்வேத தாதி உத்தியோகத்தர்களாக பதிவு செய்வதற்காக 2021 ஆம் ஆண்டில் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படாதிருந்த மையும், கொவிட் 19 தொற்றுநோய் நிலைமைக்கிடையே மக்கள் ஒன்றுகூடல் வசதியீனத்தின் அடிப்படையிலும் சில செயற்பாடுகள் 50 சதவீதத்தை விட குறைவாக அமுல்படுத்த வேண்டியிருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து எதிர்பார்த்த செயலாற்றலை அடைந்து கொள்ளல் வேண்டும். |
| (ஆ) | ஆயுள்வேத வைத்தியர், பாரம்பரிய ஆயுர்வேத வைத்தியர், ஆயுர்வேத தாதி உத்தியோகத்தர், மருந்து உதவியாளர்களை பதிவு செய்தல், அவர்களுக்காக பரீட்சைகளை நடாத்துதல், பரீட்சை பெறுபேறுகளை விநியோகித்தல் போன்ற செயற்பாடுகளின் பணிகளை மதிப்பிடுவதற்காக செயலாற்றல் குறிகாட்டி தாபிக்கப்பட்டு செயலாற்றல் மீளாய்வு செய்யப்பட்டிருக்க வில்லை. | 2022 ஆம் ஆண்டு முதல் பாரம்பரிய வைத்தியர்களாக பதிவு செய்வதற்கு விண்ணப்பங்களை கையேற்றல், நேர்முகப் பரீட்சைகளை நடாத்துதல், எழுத்துப் பரீட்சைகளை நடாத்துதல் போன்றவைகளுக்கு கால எல்லையுடன் திட்டமொன்று தயாரித்து அது செயல் நடவடிக்கைத் திட்டத்திலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. | செயற்பாட்டு பணிகளை மதிப்பிடுதற்கு செயலாற்றல் குறிகாட்டிகளை தாபித்து மீளாய்வு செய்யப்படல் வேண்டும். |

4.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 இன் ''நிகழ்ச்சி நிரல்'' இன் பிரகாரம் சகல அரசாங்க நிறுவனங்களினாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் உரிய சபையினால் தமது விடயப் பரப்பின் கீழ் வருகின்ற பணிகள் தொடர்பாக எவ்வாறு அமுல்படுத்த வேண்டியிருந்தது தொடர்பாக அறிந்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 இன் நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் ஆயுர்வேத மருத்துவ சபையின் கீழ் வருகின்ற விடயங்கள் தொடர்பாக ஆயுர்வேத மருத்துவ சபை அங்கத்தவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அமுல்படுத்த வேண்டிய நிகழ்ச்சித் திட்டங்களை தயாரிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்குரிய இலக்குகள், குறிகாட்டிகளை இனங்காணல் மற்றும் செயல் முன்னேற்றத்தை அளவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |